(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO. 188/2018 PW 3

Name பால்ராஜ்

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

01.09.2023.

குறுக்கு விசாரணை

ராஜா பாகம்கோரி விஸ்வநாதன் மீது வழக்கு போட்டுள்ளார். விஸ்வநாதனின் மனைவி மற்றும் பிள்ளைகள் மீதும் வழக்கு போட்டுள்ளார். தங்கவேல்முதலியார் எனக்கு சித்தப்பா ஆகும். நகரி கிராமம் சம்பந்தப்பட்ட சொத்துக்காக திருப்பதியில் ராஜா இதே போல் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல செய்துள்ளார். பள்ளிப்பட்டு தாலுக்காவில உள்ள சொத்திற்காக இங்கே வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு என்ன என்ன சொத்துக்கள் என்ற விவரம் தெரியும். விஸ்வநாதன் பூர்வீக சொத்தை விற்று சொத்துக்கள் வாங்கி அவரது பெயரிலும் அவரது மனைவி பெயரிலும் வாங்கி பிள்ளைகள் பெயரில் பட்டா செய்து கொண்டார். தங்கவேலு முதலியாருக்கும் எனது தகப்பனரான கோவிந்தசாமிக்கும் இடையே ஏற்பட்ட பாகத்தில் கிடைத்த சொத்தை தான் பூர்வீக சொத்து என்று கூறுகிறேன். அந்த சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியும். அந்த சொத்துகளையும் சேர்த்துதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பூர்வீக சொத்தை கிரையம் வாங்கியவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை. விஸ்வநாதன் தனது தாயார் பெயரில் இருந்த சொத்தை விற்பனை செய்து பணத்தை அவர் மட்டும் எடுத்துக்கொண்டார். சில கிரைய ஆவணங்களில் ராஜாவும் சில கிரைய ஆவணங்களில் மற்றொரு சகோதரரான அன்பழகனும் கையொப்பம் செய்துள்ளார்கள். நிறைய சொத்துக்கள் விஸ்வநாதன் கையொப்பம் செய்துள்ளார். விற்பனை செய்யும்போதே எனக்கு விவரங்கள் தெரியும். விஸ்வநாதன் வெற்றிலை வியபாரம் செய்து வருகிறார். ராஜாவும் வெற்றிலை

வியபாரம் செய்கிறார். ராஜா மதுபான கடை உரிமம் எடுத்து பிறகு அந்த வியபாரத்தை முடித்துவிட்டார். அன்பழகன் கிராம நிர்வாக அதிகாரியாக வேலை செய்தார். 2000 வருடத்திலிருந்து அவர்அவர்கள் தனிதனியாக இருந்து வருகிறார்கள். அன்பழகனுக்கு துர்காபாய் ஒரே மனைவி தான். அன்பழகனுக்கு துர்காபாய் இரண்டாவது மனைவி என்றாலும் முதல் மனைவியை பதிவு திருமணம் மூலம் திருமணம் செய்துக்கொண்டு தற்போதும் அவர் உயிருடன் உள்ளார் ' என்றால் எனக்கு தெரியாது. தங்கவேலு முதலியாருக்கு சொந்தமான டிடி கண்டிகை, ஜிஜி குப்பம், புண்ணியம் ஆகிய இடங்களில் உள்ள சொத்துக்களை விஸ்வநாதன் விற்பனை செய்துள்ளார். யாருக்கு எவ்வளவு தொகைக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும். ஆவணம் என்னிடம் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். விஸ்வநாதன் என் மீது வழக்கு தாக்கல ' செய்துள்ளதால் ஆவண நகல்களை நான் வாங்கி வைத்துள்ளேன். இந்த விவரத்தை நான் ராஜாவிடம் சொல்லவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பாக நகல் வாங்கி வைத்துள்ளேன். ராஜா விற்றுள்ள சொத்துக்கள் விவரம் எனக்கு தெரியும். சோமசுந்திரம் விஸ்வநாதனிடமிருந்து கிரைய வாங்கிய விவரம் எனக்கு தெரியும். ராஜா நான்காம் பிரதிவாதி சோமசுந்திரத்தின் மீது போடப்பட்ட வழக்கை மட்டும் திரும்ப பெற்றக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியிடமிருந்து கிரையம் பெற்ற கிறையதாரர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேரத்துள்ளர்களா என்று எனக்கு தெரியாது. ராஜா தனது மனைவி பெயரில் வாங்கியுள்ள சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்திருப்பார்கள். திருப்பதியில் உள்ள வழக்கு விவரங்கள் ராஜா தான் கொடுத்தார் நான் கொடுக்கவில்லை. ராஜா மன அழுத்ததில் இருந்தபோது தான் விஸ்வநாதன் கையொப்பம் வாங்கிகொண்டார். நேரிடையா இந்த விவரம் எனக்கு தெரியும். அன்பழகனின் மீது உள்ள சொத்துகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளார். அன்பழகனின் மனைவி பெயரில் உள்ள சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. கடனுக்காக சொத்துக்களை ராஜா, அன்பழகன், விஸ்வநாதன்

விற்பனை செய்தார்கள். ராஜாவின் கடனுக்காக சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டாலும் ராஜாவின் கடன்களை அடைக்கவில்லை. ராஜா நான்காம் பிரதிவாதி சோமசுந்திரத்துடன் பேச்சுவார்த்தை செய்தது எனக்கு தெரியாது. தங்கவேல் முதலியாரின் சொத்துக்கள் அனைத்தும் இந்த தாவாவில் சேர்க்கப்பட்டுள்ளது. என்னை பொருத்தவரை ராஜா, விஸ்வநாதன், அன்பழகன் இடையே பாகம் ஏற்படவில்லை. அவர்களுக்கு லட்சுமி, சாவித்திரி, கீதா, சாந்தா ஆகிய சகோதரிகள் உள்ளார்கள். அவர்கள் பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். 1987ல் வாய்மொழியாக பாகம் ஆனது என்றால் சரியல்ல. 1984ல் பாகம் ஆனது. அந்த வாய்மொழி பாகம் முன்னிலைக்கு நானும் ராஜா, விஸ்வநாதன், அன்பழகன் ஆகியோர்களிடமிருந்து சொத்துக்களை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. ராஜா கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.